பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 12 2024 **TUESDAY** **12.40 PM** ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வறுமை ஒழிப்புக்கு மத்திய அரசு பல்வேறு சிறப்பான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.
3. நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.
4. முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பு குறித்து கேரள முதலமைச்சரை நேரில் சந்தித்து பேசி தீர்வுகாணப்படும் என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
5. சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Smriti Bhasin – Sravya Shivani** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<>>>>>**

வறுமை ஒழிப்புக்கு மத்திய அரசு பல்வேறு சிறப்பான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி, புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்தியா தற்போது உலக நாடுகளுக்கு சிறந்த உதாரணமாக திகழ்வதாக கூறினார்.

உலகெங்கிலும் மனித உரிமைகளை பாதுகாக்கும் விதமாக ஆண்டுதோறும் டிசம்பர் 10-ஆம் தேதி மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படும் என ஐ நா பொதுச்சபை அறிவித்தன் அடிப்படையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

“நமது உரிமைகள் - நமது எதிர்காலம் இப்போதிலிருந்தே” என்பதே இந்த ஆண்டு மனித உரிமைகள் தினத்தின் கருப்பொருளாகும்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால், இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கையால் அவை நடவடிக்கைகள் தொடர்ந்து முடக்கப்படுவது சரியல்ல என்றார்.

அனைத்து உறுப்பினர்களும் அவையின் கண்ணியத்தை காப்பதோடு, மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், ஆளும் தரப்பினர்தான் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதனால், ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவையிலும், தில்லி சட்டம் - ஒழுங்கு நிலவரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் ஆளும் தரப்பினரும் பேசியதால், அமளி ஏற்பட்டயதையடுத்து, அவை நடவடிக்கைகள் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக, முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் எம் கிருஷ்ணா மறைவுக்கு அவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

<<<<>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வ விவாதங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் அவையில் ஆக்கப்பூர்வ விவாதம் நடைபெற வேண்டும் என விரும்புவதாக அவர் கூறினார்.

எனினும், எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையின்றி இருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<>>>>>

தனியார் தொழில் நிறுவனம் மீதான முறைகேடு புகார் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ், திமுக, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<>>>>>

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பொது வாழ்க்கையில் தாம் வகித்த பல்வேறு பதவிகள் மூலம், மக்களுக்காக பாடுபட்டவர் எஸ் எம் கிருஷ்ணா என குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டதன் மூலம், மக்களின் அன்பை பெற்றவர் எஸ் எம் கிருஷ்ணா என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கர்நாடகாவில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியவர் எஸ் எம் கிருஷ்ணா என கூறியுள்ளார்.

சிறந்த சிந்தனையாளரும், படிப்பாளியுமான எஸ் எம் கிருஷ்ணா மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அயராது பாடுபட்டவர் எனவும் பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கர்நாடக முதலமைச்சராகவும், வெளியுறவுத்துறை அமைச்சராகவும் பணியாற்றிய எஸ் எம் கிருஷ்ணா, இந்திய அரசியலில் உறுதியும், தொலைநோக்கும் மிகுந்த தலைவர் என குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையமான **UPSC** குடிமைப்பணிகளுக்கான பிரதான தேர்வு முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது.

தேர்வு முடிவுகளை விண்ணப்பத்தாரர்கள் **UPSC** இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ் தாத்தா உ வே சாமிநாத ஐயர் பிறந்த நாள், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று, அஇஅதிமுக உறுப்பினர் திரு கே பி முனுசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பு குறித்து கேரள முதலமைச்சரை நேரில் சந்தித்துப்பேசி தீர்வுகாணப்படும் என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், அணை பாதுகாப்புப்பணிகளை தமிழகம் மேற்கொள்வதை தடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சர், கேரளா செல்லும்போது அவருடன் தாமும் செல்ல இருப்பதாகவும், அப்போது இப்பிரச்சினை குறித்து பேசி முடிவெடுக்கப்படும் என்றும் திரு துரைமுருகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மனித கரு மூளையின் மிக விரிவான 3-D உயர் தெளிவு திறன் படங்களை சென்னை ஐ ஐ டி இன்று வெளியிட்டுள்ளது.

சென்னை ஐ ஐ டி –யில் உள்ள சுதா கோபாலகிருஷ்ணன் மூளை மையம் மேற்கொண்ட ஆராய்ச்சி மூளை வரைபடமாக்கும் அறிவியலில் உலகளாவிய மையமாக இந்தியாவை திகழச் செய்துள்ளதாக ஐ ஐ டி இயக்குனர் திரு காமகோடி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். *வாய்ஸ் பைட் - காமகோடி – 36 செகண்ட்ஸ்*

<<<<>>>>

மத்திய அரசால் செயல்படுத்தப்படும் அடல் ஓய்வூதியத்திட்டத்தின் மூலம், வேலூர் மாவட்டத்தில் சுமார் 72 ஆயிரம் பேர் பயனடைந்து வருவதாக அம்மாவட்ட முன்னோடி வங்கியின் பொது மேலாளர் திரு ஜமால் மொய்தீன் தெரிவித்துள்ளார்.

(*வாய்ஸ் பைட் - ஜமால் மொய்தீன் - 29 செகண்ட்ஸ்)*

இந்த திட்டம் தங்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது என பயனாளிகள் தெரிவித்தனர்.

(*வாய்ஸ் பைட் - பயனாளிகள் - 20 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் மூன்றாவது பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<>>>>

இந்தியாவுடனான அனைத்துப்பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வுகாண விரும்புவதாக பங்களாதேஷ் தெரிவித்துள்ளது.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத்துறை செயலாளர் திரு **Jashim Uddin,** தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இந்தியாவுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவே பங்களாதேஷ் விரும்புவதாக கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான நட்புறவை சுட்டிக்காட்டிய அவர், சுதந்திரமான, வெளிப்படையான முறையில் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணவே விரும்புவதாக தெரிவித்தார்.

பங்களாதேஷில் சிறுபான்மையின மக்கள் மற்றும் கலாச்சாரம், ஆன்மிக தலங்கள் மீதும் தூதரக கட்டிடங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவது குறித்து இந்தியா கவலை தெரிவித்திருப்பதாகவும், பங்களாதேஷ் வெளியுறவுத்துறை செயலாளர் கூறினார்.

**<<<<>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Smriti Bhasin – Sravya Shivani** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-2 என்ற செட் கணக்கில், கிரீஸ் நாட்டின் **Valenti** ரஷ்யாவின் **Ekaterina Yashina** –இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைஷ்ணவி **Adkar, Sahaja Yamalapalli** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - ஜெய்ப்பூரையும், பெங்கால் அணி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<>>>>**